செய்தி வெளியீடு எண்: 259 நாள் : 03.06.2016

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, இன்று 03.06.2016 தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், தமிழ்நாடு வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை / தோட்டக்கலைத்துறை மற்றும் மலைப் பயிர்கள் துறை, சர்க்கரைத் துறை, தமிழ்நாடு நீர்வடிப் பகுதி நீர்வடி மேம்பாட்டு முகமை மற்றும் விதைச் சான்றளிப்பு மற்றும் அங்ககச் சான்றளிப்பு, ஆகிய துறைகளின் திட்டப் பணிகள் குறித்து, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. இரா.துரைக்கண்ணு அவர்களின் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

உணவு தன்னிறைவு மற்றும் இரண்டாம் பசுமைப் புரட்சி ஆகியவற்றை கருத்தில் கொண்டு, தமிழகத்தில் பயிரிடப்படும் அனைத்து பயிர்களின், குறிப்பாக வாழை, மரவள்ளி, பூக்கள், கோகோ மற்றும் பழ வகைகளான பப்பாளி, மாதுளை, சப்போட்டா, மா, ஆகியவற்றின் உற்பத்தியை அதிகரிக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் மேலான உத்தரவின்பேரில், திட்டமிட்டு செயல்படுவது அவசியம் என்று மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் இன்றைய கூட்டத்தில் அறிவுறுத்தினார்கள். தமிழகம் பல்வேறு பயிர்கள் உற்பத்தியில், தேசிய அளவில் முதலிடம் வகித்து வருகிறது. இதற்கு முக்கிய காரணம், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு புதிய பயிர் ரகங்களை வெளியிடுவதும், உயர் தொழில்நுட்பங்களை கண்டுபிடித்து விவசாயிகளுக்கு உரிய காலத்தில் வழங்குவதுமே ஆகும். இவ்வகையான

ஆராய்ச்சிப் பணிகளில் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் தொடர்ந்து ஈடுபட்டு விவசாயிகளுக்குத் தேவையான பல புதிய பயிர் ரகங்களை வெளியிட வேண்டுமென்றும், தேசிய அளவில் எந்தவொரு மாநிலத்திலும் நடைமுறையில் இல்லாத அளவிற்கு தமிழகத்திலுள்ள சிறு, குறு விவசாயிகள் பயன்பெறும் வகையில் நுண்ணீர் பாசன கருவிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் தலைமையிலான அரசு நூறு சதவீதம் மானியம் வழங்கி வருவதாகவும் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தெரிவித்தார்.

மேலும் இன்றைய கூட்டத்தின் போது, உற்பத்தி செய்யப்பட்ட வேளாண் விளைபொருட்களை நல்ல முறையில் பாதுகாத்து நியாயமான விலைக்கு விற்பனை செய்வதை உறுதி செய்ய வேண்டுமென்று வலியுறுத்தினார். இதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தொடர்ந்து உருவாக்கப்பட்டு வருவதாகவும், இந்த வசதிகளை விவசாயிகள் பயன்படுத்தி பலன் பெறும் வகையில் உரிய விழிப்புணர்வை விவசாயிகளிடையே ஏற்படுத்த வேண்டும் எனவும் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

அதிக விளைச்சலுக்கு தரமான விதைகள் மிக முக்கிய காரணமாக இருப்பதால், விதைச் சான்றளிப்பு மற்றும் விதைத் தரத்தினை உறுதி செய்ய அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டுமெனவும், நீர்வடிப் பகுதிகளில் உள்ள விவசாயிகள் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி இந்தத் திட்டங்களின் முழுப்பயன்கள் விவசாயிகளுக்கு விரைவாகவும், உரிய காலத்திலும் சென்றடைவதை அனைத்து மாவட்ட

அலுவலர்கள் விவசாயிகளின் நலன் காக்கும் பொருட்டு, கண்காணிக்க வேண்டுமென்றும் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் முனைவர். ச. விஜயகுமார், இ.ஆ.ப., தமிழ்நாடு வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை மற்றும் தோட்டக்கலைத்துறை (ம) மலைப் பயிர்கள் துறை முதன்மை செயலர்/ஆணையர் திரு.ஷம்பு கல்லோலிக்கர், இ.ஆ.ப., வேளாண்மைத் துறை சிறப்பு செயலாளர் திரு. வெ.சந்திரசேகரன், இ.ஆ.ப, சர்க்கரைத் துறை ஆணையர் திரு.மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர். கு. இராமசாமி, தமிழ்நாடு நீர்வடிப் பகுதி நீர்வடி மேம்பாட்டு முகமை செயல் இயக்குநர் டாக்டர். இரா. ஆனந்தகுமார், இ.ஆ.ப., மற்றும் துறை உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு செயலாளர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**